சொல்கிறார்கள். கூடுமானவரை பெண்கள் கல்லூரியிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், ஆசிரியைகளையே பணியாற்றவேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கூடுமானவரை மெல்ல, மெல்ல ஆண்கள் ஆசிரியர்களாக இருக்கும் இடங்களுக்கு, தக்க அளவில் பெண்கள் கிடைப்பார்களானால் அந்த இடத்தில் ஆண்களை எடுத்துவிட்டு ஆசிரியைகளை போட வேண்டுமென்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

THIRU K. S. ABDUL WAHAB: May I know the number of High Schools in which co-education is in existence in our State ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. அதற்குத் தனி கேள்வி போடவேண்டும். கூடுமானவரை நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருகிறது.

Cement Factories

*185 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of cement factories for which licences were issued during 1966–67 in Madras ;

(*b*) among them, how many factories have started production ; and

(*c*) the reasons for other factories not doing so ?

சிமெண்டு தொழிற்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966–67-ல் தமிழகத்தில் எத்தனை சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க உரிமை வழங்கப்பட்டன ?

(இ) இவற்றில் எத்தனை உற்பத்தி தொடங்கின ?

(உ) மற்றவை உற்பத்தித் தொடங்காததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) 1966–67-ல் தமிழகத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க உரிமம் ஒருவருக்கும் வழங்கப்படவில்லை.

(இ) and (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : இதற்கு முன்னால் அனுமதி வழங்கப்பட்டவைகளில் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா ? எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது ? முந்தைய அரசில் யாருக்கு வழங்கப்பட்டது ? அவற்றில் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா ? அவை எத்தகைய நிலையில் இருக்கின்றன. ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஏற்கெனவே இருந்த சிமிண்ட் தொழிற்சாலைகள் விரைவு படுத்தக் கோரி விண்ணப்பம் போட்டு அந்த முயற்சிகள் பேரில் நான்கைந்து தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. அது தவிர, ஆலங்குளத்தில் அரசினர் சார்பில் வைக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலையில் வேலை நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே இந்தியா சிமிண்ட் லிமிடெட், சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில் நடக்கிறது. சங்கரிதுர்க்கத்தில் சேலத்தில் ஏற்கெனவே உற்பத்தி செய்துவருகிறது. டால்மியா சிமிண்ட், டால்மியாபுரம், திருச்சி மாவட்டம், ஏ. சி. சி. மதுக்கரை, கோயமுத்தூர் ஜில்லாவில் உற்பத்தி நடைபெறுகிறது. மெட்ராஸ் சிமிண்ட், ராஜபாளையம், ராமநாதபுரம் ஜில்லாவில் உற்பத்தியாகிறது. ஏ. முத்தையா செட்டியார், கரூருக்கு

பக்கத்தில் இடம் பார்க்கப்பட்டு அதற்கான மிஷினரிகளுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டு வருகின்றன. கட்டிடங்கள் வேலை நடைபெற்று வருகின்றன. உற்பத்தி செய்யும் சூழ்நிலைக்கு இன்னும் வரவில்லை. அரசாங்கத்தின் சார்பாக சோழபுரத்தின் அருகில்வைக்கப்பட்டதான தொழிற்சாலைதக்கு அடிப்படை வேலைகள் நடைபெறுகின்றன. மிஷனரிகள் வரவேண்டும். வந்து சேர்ந்ததற்குப் பிறகு உற்பத்தி தொடங்கும். சர்க்கார் சிமிண்ட் தொழிற்சாலைகள் சிறிய அளவில் வைப்பதற்கு ஒன்பது இடங்களில் வைக்கலா மென்று கருதி, கயத்தார், அம்பாசமுத்திரம், சுண்ணாம்பூர் போன்ற இடங்களுக்கு தனியார் ஆரம்பிக்க முன் வந்து ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு என் ஆர். தியாகராஜன்: முன்பு தொழிலமைச்சராக இருந்த வெங்கட்ராமன் அவர்கள் இங்கே பேபி (சிறு) சிமிண்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க திட்டமிருப்பதாகக் கூறினார்கள். அப்படி எத்தனை ஆரம்பிக்கப்பட்டன ? ஒரு நாளைக்கு அவை எவ்வளவு உற்பத்தி செய்கிறது ? ஆரம்பிக்க மூலதனம் எவ்வளவு தேவைப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஒன்பது இடங்களில் சிறிய தொழிற்சாலைகள் வைக்கலாமென்று உத்தேசித்து, கயத்தாரில் 4 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் அளவுக்கு அங்கே பொருள் கிடைக்கு மென்று தெரிகிறது. அம்பாசமுத்திரத்தில் 5 முதல் 6 மிலியன் டன் கிடைக்கும். அதில் பாதி சிமிண்டுக்குப் பயன்படும். சுண்ணாம்பூரில் 1.4 மிலியன் டன் கிடைக்கலாம். அரியலூர்-ரெட்டிபாளையத்தில் 2.50 லட்சம் டன் கிடைக்கும். கையிலருபாத்-அமினுபாத் பகுதியில் 17 மிலியன் டன் கிடைக்கும். சமால்பட்டியில் 7.5 லட்சம் டன் லைம்ஸ்டோன் கிடைக்கும். வாளையாரில் 3 மிலியன் டன் கிடைக்கும். சேத்துப்பட்டும் பாண்டிச்சேரி அருகில் 3.5 மிலியன் டன்னும் கிடைக்கும் அளவிற்கு இருக்கிறது. சிந்தாமணிப்பட்டி- குளித்தலைக்கு அருகில் 2.75 மிலியன் டன் கிடைக்கும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சமீபத்தில் சிமிண்ட் கிடைக்காத நிலையில் இருந்த அது இப்போது சர்க்காரின் கொள்கையினாலும், மற்றும் கட்டிட வேலைகள் அதிகமில்லாமல் செலவு குறைக்கப்பட்டதாலும், தொழிற்சாலைகளில் சிமிண்ட் அதிகமாகத் தேங்கியிருப்பதாகத் தெரிகிறது. அது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

Allotment of Motor-cars

*186 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Works be pleased to state :—

(*a*) the names of M.L.Cs., M.L.As., and M.Ps. from Madras, who were allotted motor-cars, from out of the State Government quota, from 2nd October 1964 to 30th September 1967 ; and

(*b*) the names of M.L.As., M.L.Cs. and M.Ps., from this State who were not allotted motor-cars ?

சட்டமன்ற, சட்டப்பேரவை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் வண்டிகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி வரை சட்டமன்ற, சட்டசபை, பாராளுமன்ற சென்னை உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கு யார் யாருக்கு மோட்டார் வண்டிகள் தமிழக அரசு பங்கீட்டிலிருந்து வழங்கப்பட்டன ?